**1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்**

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தி மற்றும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 55 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 52 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**மஹிந்த ராஜபக்ஷ**
**சனாதிபதி**

கொழும்பு,
2010 11.19 ஆந் தேதி.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 2010 ஆம் ஆண்டின் ……….. ஆம் இலக்க, பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (சம்பந்தப்பட்ட ஆட்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. மேலேயுள்ள சட்டத்தின் நோக்கங்களுக்காக, கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனி தொடர்பாக “சம்பந்தப்பட்ட ஆள்” என்பது –

(அ) நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியின் அல்லது உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனியின் சாதாரணப் பங்கு மூலதனத்தின் இருபது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ சொந்தமாக வைத்திருப்பவராகவுள்ள, அல்லது நம்பிக்கைப் பொறுப்புக் கம்பனியிலுள்ள அல்லது உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனியிலுள்ள மொத்த வாக்குகளின் இருபது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பிரயோகிப்பதற்கு இயன்றவராகவுள்ள எவரேனுமாள்;

(ஆ) எந்தக் கம்பெனியின் சாதாரண மூலதனத்தின் இருபது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்டது, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியினாலும் உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனியினாலும் ஒன்றாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றதோ அல்லது மொத்த வாக்குகளின் இருபது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்டது, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமலோ நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியினாலும் உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனியினாலும் பிரயோகிக்கப்படுகின்றதோ அந்தக் கம்பெனி;

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளரின், அல்லது (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது ஒரு கம்பெனியின் உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனியின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர்,

என்று பொருளாகும்.